படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்நதெடுக்கும்."

தீர்மானம் பேரவையின்முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 24—3—1973, சனிக்கிழமை, காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டு வோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 26—3—1973 திங்கட்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலக்கிக் கொள்ள விரும்பும் வேட்பாளர் கள் 27—3—1973 செவ்வாய்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படு மாயின் 29—3—1973, வியாழக்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) மதிப்பீட்டுக் கழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன—

"தமிழ் நாடு சட்டப்பேரவையின் 164-வது விதியின் கீழ் 1973-74-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்